

கோவை தெற்கு மாவட்டம், பொள்ளாச்சி சட்டமன்றத் தொகுதி அலுவலகத்தை மாவட்டக் கழகச் செயலாளர் தளபதி முருகேசன் தலைமையில் கழக மேற்கு மண்டலப் பொறுப்பாளர் வி.செந்தில் பாலாஜி திறந்து வைத்து பாக நிலை முகவர்கள் (BLA2) கூட்டத்தில் ஆலோசனைகளை வழங்கினார். இதில் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி, தொகுதி பார்வையாளர் மணி சுந்தர், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் மு.கண்ணப்பன், கழக தகவல் தொழில்நுட்ப அணி இணைச் செயலாளர் டாக்டர் சி.மகேந்திரன், தூய்மைப் பணியாளர்கள் நலவாரிய தலைவர் திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி உள்பட மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக, வட்டக் கழக, கிளைக் கழகச் செயலாளர்கள், பொறுப்பாளர்கள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக நிலை முகவர்கள் (BLA2), பலர் கலந்து கொண்டனர்.



நெடுஞ்சலைத்துறை சார்பில் 14.06கோடி மதிப்பீட்டில் திருவாரூர் வழி நாகை – மைசூர் சாலை விரிவாக்கப் பணிகளை மாவட்டச் செயலாளர் பூண்டி. கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தொடங்கிவைத்தார். மாவட்ட ஆட்சியர் மோகன சந்திரன், நகர்மன்றத் தலைவர் புவனப்ரியா செந்தில், நகர செயலாளர் வாரை.பிரகாஷ், நகர்மன்ற உறுப்பினர்கள் டி.செந்தில், ராமு,நகர பொருளாளர் ரஜினிசின்னா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



பெரம்பலூர் மாவட்ட தி.மு.க.சார்பில், பேரறிஞர் அண்ணா அவர்களின் 57 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு, வேப்பந்தட்டை மேற்கு ஒன்றியம்,கிருஷ்ணாபுரம் கடைவீதி வழியாக அமைதி ஊர்வலம் வந்து அங்குள்ள அறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் சிலைகளுக்கு, மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தலைமையில், சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் முன்னிலையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, இரா.ப.பரமேஷ்குமார், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், நூருல்ஹிதா இஸ்மாயில், சன்.சம்பத், மாவட்ட பொருளாளர் செ.இரவிச்சந்திரன், ஒன்றிய செயலாளர்கள் எம்.இராஜ்குமார், செ.நல்லதம்பி, சி.ராஜேந்திரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஹரிபாஸ்கர், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.




